**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 21** **நாள்: 23.02.2017**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.</u>**

தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி, தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி திட்டம் 2017 பிப்ரவரி 6ம் தேதி துவக்கி வைக்கப்பட்டு, 9 மாதம் முடிவடைந்த, 15 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் 2017 பிப்ரவரி 6 முதல் பிப்ரவரி 28 வரை பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக நடத்தப்பட்டு வருகிறது.

வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களின் தலைமையில் வடக்கு வட்டார அலுவலகத்தில் தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி பற்றிய கலந்தாய்வு கூட்டம் தனியார் பள்ளிகளின் தாளாளர், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோருடன் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி பற்றி எழுப்பிய வினாக்கள் மற்றும் சந்தேகங்களுக்கு தகுந்த பதில் அளிக்கப்பட்டது. அளிக்கப்பட்ட பதிலினை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய பெருமக்கள் ஏற்றுக்கொண்டதினால் தனியார் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி முகாமில் அரசு பள்ளிகள், அரசு சார்ந்த பள்ளிகள், தனியார் பள்ளிகள் என பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பள்ளிகளிலும் உள்ள குழந்தைகளுக்கு தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. தடுப்பூசி போடப்பட்ட அனைத்து குழந்தைகளும் நலமாக உள்ளனர்.

தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி போடுவதனால் குழந்தைகளுக்கு இரண்டு உயிர் கொல்லி நோய்களான தட்டம்மை மற்றும் ரூபெல்லாவிலிருந்து வாழ்நாள் முழுவதும் பாதுகாப்பு கிடைக்கின்றது. எனவே, தாய்மார்கள் எவ்வித தயக்கமும், பயமுமின்றி, இத்தடுப்பூசி திட்டத்தில் கலந்துகொண்டு, தங்களுடைய 9 மாதம் நிறைவடைந்த குழந்தை முதல் 15 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி போட்டுக் கொண்டு பயன்பெறுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது. விடுபட்ட குழந்தைகளுக்கு மாநகராட்சி பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் மூலம் தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**